வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2524/ஆ5/2023, நாள். 13.07.2023

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – அறிவியல் நகரம் – 2022–2023ஆம் ஆண்டிற்கான சிறந்த அறிவியல் ஆசிரியர்களுக்கான விருது வழங்கிட – பள்ளிகளிடமிருந்து கருத்துருக்கள் பெற்று – இவ்வலுவலகம் சமர்பிக்க கோருதல் – சார்பு |
| பார்வை | 1. G.O. (Ms) No.192 Higher Education (B2) Department, Dated. 13.08.2018<br>2. சென்னை –6, பள்ளிக் கல்வி இமைண இயக்குநரின் (இடைநிலைக் கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.038066/ ஐ/2023, நாள். 04.07.2023 |

.....

பார்வை 1–ல் காணும் அரசாணையின் படி ஒவ்வொரு ஆண்டும், அறிவியல் ஆசிரியர்களாக பணிபுரியும் ஆசிரியர்களில் சிறந்த அறிவியல் ஆசிரியர்களை கண்டறியவும், ஊக்கப்படுத்தவும் அதன் ஊடாக மாணாக்கர்களை எதிர்காலத்தில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் அறிவியலர்களாக உயர்த்துவதற்கும் அறிவியல் நகரம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த அறிவியல் ஆசியர்கள் 10 நபர்கள் தேர்வு செய்து 5 ஆசியர்கள் தமிழ்வழி பள்ளிகளில் இருந்தும் ( Tamil Medium), 5 ஆசியர்கள் திறந்த நிலை பிரிவிலும் (Open Category) தேர்ந்தெடுக்கப்பட்டு ரொக்கப் பரிசாக தலா ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) காசோலையாகவும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகிறது.

பார்வை 2–ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி) அவர்களின் செயல்முறை ஆணைக்கிணங்க 2023–2023ஆம் ஆண்டிற்கான அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அறிவியல் ஆசியர்களுக்கான விருது வழங்க தகுதி வாய்ந்த நபர்களின் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. இவ்விருதிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள 5 வகைப் பாடப் பிரிவுகளில் தகுதி வாய்ந்த சாதனைகள் புரிந்துள்ள ஆசிரியர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சிறந்த அறிவியல் ஆசிரியர்கள் விருது 2022-2023ம் ஆண்டிற்கான தகுதி வாய்ந்த அறிவியல் ஆசியர்களின் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் தலைமையாசியரின் கையொப்பத்துடன் மூன்று நகல்களில் பள்ளிகளிடமிருந்து பெற்று சரிபார்த்து 28.07.2023 அன்று மாலை 4.00 மணிக்குள் இரண்டு நகல்கள் இவ்வலுவலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலருக்கு (இடைநிலைக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. படிவம்
2. பார்வையில் காணும் அரசாணை

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்.
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி)
வேலூர் மாவட்டம்.

நகல்.

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
(குறிப்பிட்டுள்ள காலக்கெடுவுக்குள் நினைவூட்டுக் இடமளிக்காமல் இப்பொருள் சார்ந்த விவரம் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலைக் கல்வி ) ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. )